49—

கொப்பரை உலர் களங்கள்

***458—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எண்ணம், சொல், செயல்' இவற்றை ஒருங்கிணைத்து, 'திட்டம், நிருவாகம், செயல்பாடு' ஆகியவற்றைச் செம்மைப்படுத்தி, 'வளம், வாய்ப்பு, தகவல் பரிமாற்றம்' ஆகியவற்றை மேம்படுத்தி, 'உற்பத்தி, சந்தைப்படுத்துதல், வருமானம்' உள்ளிட்ட விவசாயிகளின் வாழ்வாதார உயர்விற்கு நித்தம், நித்தம் பாடுபடும் எங்கள் தலைவி, தங்கத் தலைவி, உன்னதத் தலைவி, ஒப்புயர்வற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) காவியத் தலைவி, சரித்திரத் தலைவி, பார் போற்றும் தலைவி எங்கள் அம்மா, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் பகுதியில் கொப்பரை உலர் களங்கள் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியிலே, 2,100-க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்களிலே தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. அங்கே 75 இலட்சம் தென்னை மரங்கள்*

உள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக மூன்றரை இலட்சம் தேங்காய்கள் பறிக்கப்படுகின்றன. இவ்வளவு வளமான பூமியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, கொப்பரைத் தேங்காய் உலர் களங்களை அமைத்தால்தான் விவசாயிகள் முழுமையான பயனைப் பெற முடியும். பசுமைப் புரட்சியின் மூலமாக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று நமது அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இன்று பேரவையில் நடைபெறக்கூடிய மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பச்சை பசேல் என்ற எங்கள் நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, கன்னியாகுமரி மற்றும் கோவை மாவட்டங்களில் உலர் களங்கள் அமைக்கப்படுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதிக விளைச்சல் இருக்கக்கூடிய எங்கள் பகுதியில் கொப்பரைத் தேங்காய் உலர் களங்கள் அமைப்பதனால் விவசாயிகள் அதிக அளவு பயன்பெற முடியும். உலர் களங்கள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் தங்களுடைய வீட்டில் கொப்பரைத் தேங்காய்களை உலர வைப்பதால் முழுமையான பயனை அவர்களால் பெற முடியவில்லை. எனவே, தயவுகூர்ந்து தென்னை விளைச்சலை கருத்தில்கொண்டு, பசுமை நிறைந்த கடையநல்லூர் பகுதியிலே தென்னை உலர் களங்கள் அமைத்தால் விவசாயிகள் பயன்பெற முடியும் என்ற எனது கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், விவசாயத்தையும் வளர்த்து இன்று தமிழகத்தை முன்னோடி மாநிலமாக்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கடந்த 2011 முதல் 2014 வரை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மொத்தமாக 343 உலர் களங்கள், 11 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 30 உலர் களங்கள் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன.

முற்பகல் 10-40

மேலும், கடையநல்லூர் மற்றும் தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ள உலர் களங்களில் கொப்பரைகளை உலர்த்த விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், கடையநல்லூர் மற்றும் தென்காசி பகுதியில் உள்ள பொய்கை, காசிதர்மம், கம்பநேரி மற்றும் நெடுவயல் ஆகிய கிராமங்களில் உலர் களங்கள் அமைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த உலர் களங்களையும் கொப்பரை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கங்களுக்கும், உறுதிமொழிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

வீட்டுமனைப் பட்டா

***1380—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, பஜார் தெருவில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?